**இலங்கை மாநாட்டுப் பணியகம் - 2013**

இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்புடனான 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க இலங்கை சுற்றுலா செயற்பாடுகள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்பத் தயாரிக்கப்படுதல் மற்றும் நியாயபூர்வமாக தயாரிக்கப்படுதல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்கள் அற்ற நிதிசார் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானவாறான தேவையான உள்ளக கட்டுப்பாட்டை தீர்மானித்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களது சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000 - 1810) இசைவான இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வு நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகின்றது.

**2. நிதிசார் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் (SLPSAS) களுக்கு இணங்காமை**

இ.அ.து.க.நி 09 க்கமைய, கையிருப்பைப் பெறுமதியிடும் கொள்கை நிதிசார் கூற்றுக்களில் வெளிக்கொணரப்படவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கட்டிட வளாகப் புனரமைப்புக்கெனச் செலவிடப்பட்ட ரூபா 2,020,565 நிலையான சொத்தாகக் காட்டப்பட்டிருந்தது.

**2.2.3 எதிர்பாராப் பொறுப்புகள்**

2008 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை ஹோட்டல் மற்றும் முகாமைத்துவ நிறுவகத்திற்குச் சொந்தமான கட்டிடத்தில் பணியகமானது வாடகை ஒப்பந்தம் எதுவுமின்றி நடாத்தப்பட்டு வருவதுடன் மீளாய்வாண்டு முடிவுவரை வாடகை செலுத்தப்படாதுமிருந்தது. கட்டிட வாடகையை மதிப்பீடு செய்து காட்டுமாறு குறித்த நிறுவகத்திடம் கோரப்பட்டபோதும் மீளாய்வாண்டு முடிவுவரை வாடகை மதிப்பீடு செய்யப்பட்டுக் காட்டப்படவில்லை. எவ்வாறாயினும், இது வரை கணக்கில் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்படவுமில்லை.

**2.2.4 விபரிக்கப்படாத வேறுபாடுகள்**

இலங்கை மாநாட்டுப் பணியகக் கணக்குகளையும் ஏனைய நிறுவனங்கள் சமர்ப்பிக்கும் நிதிசார் கூற்றுக்களையும் ஒப்பிடும்போது பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்கின் விபரம் | கணக்கின் பிரகாரமான மீதி | ஒப்பிட்டுப்பார்க்கப்பட்ட நிறுவகம் | அக்கணக்கு மீதி | வேறுபாடு /(குறைவு) |
|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | ரூபா |
| கடன்கொடுத்தோர் | -இல்லை- | இலங்கை ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் | 53,559 | (53,559) |
| சேர்ந்துநின்ற செலவினம் | 611,162 | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை | 694,466 | (83,304) |

### 2.2.5 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

திருப்பிப் பெறவேண்டிய பெறுமதிசேர் வரியாகிய ரூபா 450,554 நிதிக் கூற்றுக்களில் 2011 ஆம் ஆண்டு முதல் உட்சேர்க்கப்பட்டு வருவதுடன் அதனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே காணப்படும் விடயங்களுக்கெதிரே சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| கணக்கின் விபரம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| கடன்பட்டோர் | 2,446,084 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் |
| கடன்கொடுத்தோர் | 1,122,483 | - மேற்படி - |
| சேர்ந்து நின்ற செலவினம் | 1,196,747 | - மேற்படி - |

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே காணப்படும் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) தாபன விதிக்கோவை vi அத்தியாயம் VI பிரிவு 2.10 | ஆட்சேர்ப்பு, வேலை இடமாற்றம், பதவி உயர்வு, சம்பள ஏற்றக் கொடுப்பனவு மற்றும் ஊழியர் ஒழுக்காற்று நடவடிக்கைகள் சம்பந்தமான கடிதங்களின் பிரதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறு செய்யப்படவில்லை. |
| (ஆ) 2006 ஜனவரி 25 ஆந் திகதிய தேசிய கொள்வனவு முகவராண்மைச் சுற்றறிக்கை அத்தியாயம் 4 பந்தி 2.1 (அ) | எதிர்வரும் ஆண்டின் பொருட்டு விரிவான திட்டத்துடன் குறைந்தது 3 ஆண்டுகளுக்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமாயினும், பணியகம் அந்த அறிவுறுத்தலைக் கடைப்பிடிக்கவில்லை. |
| (இ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரிச் சுற்றிக்கை இலக்கம் IAI/2002/2 | கணனித் துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் சம்பந்தமாக நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பணியக நடவடிக்கைகளினால் நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட மிகை ரூபா 60,811,424 ஆக இருந்ததுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 37,692,150 ஆனதால் நிதிசார் விளைவுகளில் ரூபா 23,119,274 அதிகரிப்பு காணப்படுகின்றது. ஏற்றமதித்தீர்வை அதிகரிப்பு மற்றும் சுற்றுலா அபிவிருத்தித் தீர்வை வருமானம் என்பன அதிகரித்தமையே நிதிசார் விளைவுகளின் அதிகரிப்புக்கு முக்கிய காரணியாயிற்று.

### 3.2 பகுப்பாய்வுடன்கூடிய நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டின்போது பணியகத்தின் வருமானம் ரூபா 108,714,513 ஆகும். அதனை முன்னைய ஆண்டின் ரூபா 89,626,271 உடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 21.2 சதவீத அதிகரிப்பு காணப்படுகின்றது. அவ்வாறே, முன்னைய ஆண்டின்போது பணியகம் செலவழித்த ரூபா 67,922,071 உடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின்போது செலவிடப்பட்ட தொகை ரூபா 40,962,540 ஆகும். அதற்கமைய, 39.7 சதவீதக் குறைவு அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலா விவகார அதிகாரச்சட்டத்தின் 42(2) பிரிவின் பிரகாரம் பின்வரும் இலக்குகளையும் நோக்கங்களையும் மீளாய்வாண்டிலோ அல்லது முன்னைய ஆண்டுகளிலோ பணியகத்தால் நிறைவேற்ற முடியாது போயிற்று.

(அ) சர்வதேச, வலயரீதியான மற்றும் உள்ளூர் மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் கண்காட்சிகள் நடைபெறும் இடமாக மற்றும் சலனமடையும் சிறு சுற்றுலா இடமாக இலங்கையை ஒருங்கிணைத்தல் மற்றும் அனுசரணையுடன் அபிவிருத்தி செய்தல் மற்றும் சுற்றுலாச் சந்தையில் இலங்கை தொடர்பாக சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் ஏற்படுவதைப் பொறுப்பாகத் திட்டமிட்டு பொதுக்கொள்கை ஒன்றை ஏற்படுத்துதல்.

(ஆ) மாநாடுகள் கூட்டங்கள் மற்றும் கண்காட்சிகளை வெற்றிகரமாக நடாத்துதல் மற்றும் சலனமடையும் சிறு சுற்றுலா நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குவதற்குப் பொறுப்பாக இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மாநாடுகள், கண்காட்சிகள் மற்றும் சிறு சுற்றுலா ஏற்பாடுகளுடன் ஒருங்கிணைந்து அனுசரணையாக இருத்தல்.

(இ) மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் சலனமடையும் சிறு சுற்றுலா நிகழ்ச்சித்திட்டங்களது பல்வேறு பிரிவுகளிலும் உள்ளோருக்கும் அமைப்புகளுக்கும் தொழில்சார் நியமங்களை விதித்தலும் அந்நியமங்களைப் பேணுவதற்குப் பொறுப்பாக இருத்தலும்.

(ஈ) மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் சலனமடையும் சிறு சுற்றுலாத்துறையின் பல்வேறு பிரிவுகளிலும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு தரத்தினர் அல்லது அமைப்புகளினது தொழில்சார் நிபுணத்துவ அபிவிருத்தியைத் தூண்டுதலும் மேம்படுத்தலும்.

(உ) மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் சிறு சுற்றுலாவை அவிருத்தி செய்தலும் அவற்றின் மேம்பாட்டிலும் ஈடுபட்டுள்ள ஏதாவது சங்கங்கள் அல்லது அமைப்புகளுடன் இணைந்து கொள்ளலும் அவற்றின் அங்கத்துவத்தைப் பெறுவதற்கு அல்லது ஏதாவது சங்கம் அல்லது அமைப்புகளுடன் உடன்படிக்கைகளில் ஈடுபடலும்.

(ஊ) இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இலங்கையை சுற்றுலா அல்லது சுற்றுலா முடிவுதளமாக அபிவிருத்தி செய்தல், மேம்படுத்துதல் என்பவற்றுடன் சுற்றுலாச் சந்தையில் சந்தைப்படுத்தலுக்கான வழிகாட்டுதலைப் பணியகத்திற்கு வழங்குதல்.

(எ) உபசரிப்புச் சேவை அடங்கலான போதியளவு, ஈர்ப்புடன் கூடியதும் வினைத்திறனுடனுமான சுற்றுலாச் சேவைகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் விதத்தில் அபிவிருத்திகளை மேற்கொள்ளுதலும் மேம்படுத்தலும்.

### 4.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பணியகத்தின் வங்கி நடைமுறைக் கணக்கில் ஒவ்வொரு மாத இறுதியிலும் ரூபா 43 மில்லியனுக்கு மேற்பட்ட தொகை எஞ்சியிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இந்நிலைமை காரணமாக, நடைமுறை விகிதம் 43:1 எனும் அதிகூடிய விகிதத்தில் இருப்பதுடன் தொழிற்படு முகாமைத்துவம் சிறப்பான மட்டத்தில் இல்லாதிருப்பதும் அவதானிக்கப்பட்டது.

### 4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பணியகத்தின் கடமைகளுடன் தொடர்பற்ற வெளிநாட்டுப் பயணங்களுக்கு நிதி, திட்டமிடல் அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க ரூபா 517,450 செலவிடப்பட்டிருந்தது.

### 4.4 பதவியணியினர் நிர்வாகம்

பணியகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 18 சதவீத வெற்றிடம் நிலவியது. முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் மனிதவளத்திற்கான மொத்தக் கிரயம் முறையே ரூபா 6.3 மில்லியன் மற்றும் ரூபா 8.9 மில்லியன் ஆகவிருந்தது. இதற்கமைய, முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் ஒரு ஊழியரின் பொருட்டான கிரயம் முறையே ரூபா 1,055,826 மற்றும் ரூபா 997,867 ஆகவிருந்தது.

### 4.5 ஊழியர் பணிக்கொடைக்கான நிதியேற்பாடு

ஊழியர் பணிக்கொடைக்கென ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 1,087,639 பொருத்தமான முதலீடு ஒன்றில் இடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 5. கணக்களி தகைமையும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2013 – 2015 காலப்பகுதிக்கெனத் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தைப் பரிசீலனை செய்தபோது கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கூட்டிணைந்த திட்டத்தின் படி மீளாய்வாண்டில் செலவிடுவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட தொகை ரூபா 88,800,000 ஆகும். எனினும், வருடாந்த செயல் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் செலவிடத்திட்டமிடப்பட்ட தொகை ரூபா 63,950,000 ஆகும். இதனால் கூட்டிணைந்த திட்டத்திற்கமைய செயல்திட்டம் அமையாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கூட்டிணைந்த திட்டத்தில் உள்ள மீளாய்வாண்டுக்கான திட்டத்தின் பிரகாரம், செலவானது 3 செலவினத் தலைப்புகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. ஆண்டின்போது அதனை விரிவாக எய்துவதற்கு எதிர்பார்த்த இலக்குகளும் நோக்கங்களும் காட்டப்படவில்லை.

(இ) 2003 ஜூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 பந்தியின் பிரகாரம், கூட்டிணைந்த திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திறன் திட்டத்தில் குறித்த காலத்திற்கெனத் திட்டமிடப்பட்ட இலக்குகளையும் நோக்கங்களையும் எய்துவதற்கான பொறுப்புடைய உத்தியோகத்தர்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டுமாயினும், அவ்வாறு செய்யப்படவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட இலக்குகளும் நோக்கங்களும் ஆண்டின்போது எய்தப் பெற்றனவா என்பதை உறுதிசெய்வதற்கான பௌதிக முன்னேற்றம் தொடர்பான அறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

பணியகத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டபோதும், நிதிப் பிரமாணம் 133 க்கமைய பணியகச் செயற்பாடுகளுக்கிணைவான உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெறவில்லை.

### 5.4 கொள்வனவுத் திட்டம்

2006 ஜனவரி 25 ஆந் திகதிய தேசிய கொள்வனவு முகவராண்மைச் சுற்றறிக்கையின் 8 ஆம் இலக்கத்தினது 4.2.1(பீ) க்கமைய பிரதான கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படவில்லை.

### 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவுகளுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் (வேறுபாடுகள் 22 சதவீதத்திற்கு மேற்பட்டவை) அடங்கிய 10 செலவின விடயங்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டதாகத் தோன்றவில்லை.

### 5.6 வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2011 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை 2014 ஆம் ஆண்டிலேயே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான அறிக்கையின் மூலம் பணியகத்தின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டது. கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீடு
(ஆ) கணக்கீடு
(இ) மேம்பாட்டு நடவடிக்கைகளைச் செயற்படுத்தல்
(ஈ) மனிதவள முகாமைத்துவம்
(உ) உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள்